**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வீட்டுவசதி-தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்கப்படாமல் உள்ள வீடுகள் /அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் மனைகளை விற்பதற்கு என விதிமுறைகளை தளர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீவ.4.2).த்துறை**

அரசாணை (நிலை) எண்.29. நாள்.22.1.2001.

<u>படிக்க:</u>

அரசாணை (நிலை) எண்,427. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.18.10.2001.

<u>ஆணை</u>

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்கப்படாமல் தேங்கியுள்ள வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீட்டு மனைகளை விரைவில் விற்பது குறித்து அமைச்சர் (வீட்டுவசதி) அவர்கள் தலைமையிலும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையிலும் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுக்களின் பரிந்துரைகளை அரசு கவனமாக ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது

1.வீட்டுவசதி வாரியத்தால் 30.6.2000-க்கு முன் கட்டி முடிக்கப்பட்டு 31.12.2000 அன்று வரை விற்பனை ஆகாமல் உள்ள வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டி முடிக்கப்பட்ட தேதியில் ருந்து அது விற்கப்படும் நாள் வரைக்கான வட்டி முதலாக்கம் செய்வதை நீக்கி திட்டம் முடிக்கப்பட்டபோது நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கலாம்.

2.திட்டம் செயல்படுத்தப்பட்ட உடன் மனைகள்/வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவைகளை ஒதுக்கீடு செய்யும்போது முதல் முறையில் எற்கனவே உள்ள வாரிய விதிமுறைசளைப் பின்பற்றி குலுக்கல் நடத்தப்பட வேண்டும். அதன்பின், விற்கப்படாமல் உள்ள மனைகள்/வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகளை நடப்பில் உள்ள கீழ்க்கண்ட விதிமுறைகளை தளர்த்தி முதலில் வருவோர்க்கு முதலில் ஒதுக்கீடு என்ற அடிைப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(அ) மனுதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக ருக்க வேண்டும்.

(ஆ) மனுதாரர் 21 வயது நிரம்பியவராக ருக்க வேண்டும்.

()ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனை/வீடு/அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யக் கூடாது.

3.விற்பனைப் பத்திரம் பெறுவதற்கு வீட்டுவசதி செலுத்திய ரசீது சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

4.அரசு பங்கீட்டின்கீழ் ஒதுக்கீடு பெற ஏற்கனவே உள்ள பிரிவுகளைத் தவிர பொது நிறுவனம், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், பத்திகையாளர்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பணிபுரிபவர்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட ஈட்டுறுதி நிறுவனங்களில் பணிபுரிபவர்களையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

5.வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு விற்கப்படாமல் உள்ள வீடுகள்/குடியிருப்புகளை அரசு அலுவலர் குடியிருப்புகளாகவோ, காவலர் வீட்டுவசதி குடியிருப்புகளாகவோ தேவைப்படும் டங்களில் மாற்றி ஒதுக்கீடு செய்யலாம், மற்றும்

6.வாரியக் கட்டமைப்புகளைக் குறைத்தும் தேவையற்ற பணியாளர் செலவுகள் மற்றும் வீண் செலவுகளை குறைத்தும் வாரியக் கட்டுமானங்களில் விற்பனை விலையைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.மேற்காணும் ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய விதிமுறைகளுக்குத் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை யக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

அஜெய் பட்டாச்சார்யா,

அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

மேலாண்மை யக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை-35.

அமைச்சர் (வீட்டுவசதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9,

தனிச் செயலாளர், தலைமைச் செயலாளரின் அலுவலகம், சென்னை-9.

நிதித் துறை, சென்னை-9.

உள்துறை, சென்னை-9.

பொது (கமுக்கம்) துறை, சென்னை-9.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9,

<u>நகல்:</u>

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வா.5) துறை, சென்னை-9.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வா.1) துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.